**O.S. No.355/2019**

**PW1 திரு.வெற்றிவேல்**

**22.06.2023.**

1 முதல் 4, 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-

பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையை படித்து பார்த்துள்ளேன். தாவா சொத்தை காளியப்பன் நாடார் உட்பட 10 பேர் சேர்ந்து 1955ம் ஆண்டு கிரையம் வாங்கினார்கள் என்றால் 1951ல் தான் கிரையம் வாங்கினார்கள். அந்த கிரையம் வாங்கியவர்களில் யாரும் உயிருடன் இல்லை என்றால் சரிதான், வாரிசுகள் இருக்கிறோம். அந்த 10 பேரில் சின்னக்காளை நாடார், மதியராஜ் நாடார் ஆகியோர்களின் நேரடி வாரிசுகள் உயிரோடு இருக்கிறார்கள், வெளியூரில் இருக்கிறார்கள். சின்னக்காளை நாடாருக்கு ஜெயராஜ், நடராஜ் மற்றும் இரண்டு பேர்கள் சிவகாசியில் இருக்கிறார்கள். மதியராஜ் நாடாருக்கு ஜாக்குலின், மலைச்சாமி ஆகிய வாரிசுகள் இருக்கிறார்கள் என்றால் சரிதான், சின்னதம்பி என்பவரும் நாகமலை புதுக்கோட்டையில் இருக்கிறார். நான் தாக்கல் செய்துள்ள வாசாஆ1 பத்திரத்தில் நாகமலை புதுக்கோட்டை கிராமத்தில் இருக்கும் நாடார் பொதுவுக்காக மேற்படி ஊரில் இருக்கும் உறவின்முறை நாடார்கள் என்ற வாசகம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாசாஆ1ல் கண்டுள்ள 10 பேருக்கு பொது சொத்து என்று சொன்னால் 10 குடும்பத்திற்கு மட்டும் பாத்தியப்பட்ட சொத்து. மேற்படி சொத்து 10 குடும்பத்திற்கு மட்டுமே தனியாக உரிமை கொண்டாட முடியாது என்றும் நாடார் பொதுவுக்காக வாங்கப்பட்ட சொத்து என்பதால் அது பொது சொத்து என்று சொன்னால் சரிதான். மேற்படி 10 பேரின் வாரிசுகளும் தனிப்பட்ட முறையில் உரிமை கொண்டாட முடியாது என்றால் சரிதான். இன்றுவரை யாரும் உரிமை கொண்டாடவில்லை. ஆரம்பத்தில் K.V.முத்தையா நாடார் பெயரில் வழக்கு சொத்தை பொறுத்து பட்டா எண்.1941 காப்பாளர் என்ற முறையில் தான் பட்டா கொடுக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு சரியாக தெரியாது, பட்டா அவர் பெயரில் தான் கொடுக்கப்பட்டது. அந்த பட்டா UDR சமயத்தில் தான் ஏற்பட்டது என்றால் சொத்து

வாங்கும் போதே கொடுக்கப்பட்டது. அந்த பட்டா சொத்து வாங்கும்போதே ஏற்படவில்லை என்றும் UDR சமயத்தில் தான் ஏற்பட்டது என்றால் எனக்கு தெரியாது. K.V.முத்தையா நாடாரும் வழக்கு சொத்தை அவரது தனிப்பட்ட சொத்தாக கருதவில்லை என்றால் சரிதான். அவரும் நாடார்களுக்கு பொதுவான சொத்து என்று தான் கருதினார் என்றால் சரிதான். இன்றுவரை நாடார் பொது சொத்து என்று தான் கருதி வருகிறோம் என்றால் சரிதான். வழக்கு சொத்து 1955 முதல் 1995 வரை காலிமனையிடமாக தான் இருந்தது என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை. 1955 கிரையத்திற்கு பின்னர் மேற்படி 10 பேரும் நாகமலை புதுக்கோட்டை கிராமத்தில் வசிக்கக்கூடிய நாடார் மக்களுடன் இணைந்து நாகமலை புதுக்கோட்டை நாடார் உறவின்முறை என்று செயல்பட்டு வந்தார்கள் என்றால் சரிதான். அந்த காலத்தில் நாகமலை புதுக்கோட்டையில் NGO குடியிருப்பு இந்து நாடார் உறவின்முறை என்ற பெயரில் பதிவு செய்யப்பட்ட சங்கமாக மற்றொரு சங்கம் செயல்பட்டு வந்தது என்றால் எனக்கு தெரியாது.

குறுக்கு விசாரணை :– வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.